# IN THE COURT OF THE DISTRICT MUNSIF OF SULUR
## (DEPOSITION OF WITNESS

**வா.சா.2-)**

அசல் வழக்கு எண். 110/2022

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ராஜசேகரன் | தாலுக்கா | கோவை |
| தந்தை பெயர் | வீரமுத்து | கிராமம் | கோவை |
| பணி | பதிவறை எழுத்தர் | மதம் | |
| வயது | | | |

Solemnly affirmed and sworn by Tmt.A.Santhi, Assistant on 12.11.2025 is accordance with the provision of Act X of 3331

**முதல் விசாரணை**

1. நான் கோயம்புத்தூர் மாநகராட்சியில் பிரதான அலுவலகத்தில் பதிவறை எழுத்தராக பணியாற்றி வருகிறேன். நீதிமன்றத்தில் இருந்து ஆணையாளர் அவர்களுக்கு அழைப்பாணை வந்தது. இந்த நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்க எனக்கு ஆணையாளர் அங்கீகாரம் அளித்து சான்றிதழ் வழங்கியுள்ளார். **07.11.2025 தேதியிட்ட அங்கீகார சான்றிதழ் வா.சா.ஆ.13 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**அழைப்பாணையில் கௌரி த/பெ.சண்முகம் (எ) வேலாயுதம், 25.04.1975 ல் கோவை அரசு மருத்துகல்லூரி மருத்துவமனையில் பிறந்ததாகவும் அவருடைய பிறப்பு பதிவேடு எடுத்து வரச் சொல்லி அழைப்பாணையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

2. பிறப்பு பதிவேட்டை நான் கொண்டு வந்துள்ளேன். **கோவை மாநகராட்சி பிறப்பு பதிவேடு சான்றிட்ட நகல் வா.சா.ஆ.14 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பிறப்பு பதிவேட்டில் வரிசை எண்.1780, மாதாந்திர பதிவு எண்.379 ல் வேலாயுதம், சரஸ்வதி தம்பதியினருக்கு பெண் குழந்தை பிறந்தது என பதிவேட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**<u>1, 4 முதல் 9 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

1. வா.சா.ஆ.14 பதிவேட்டில் கௌரி என பெயர் இல்லை என்றும், பெண் குழந்தை பிறந்ததாக மட்டும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வேலாயுதம் மற்றும் சரஸ்வதி ஆகியோர்களின் பெயர்கள் மட்டும் உள்ளது என்றும் விலாசம் இல்லை என்றால் விலாசம் உள்ளது, பழைய ஆவணம் என்பதால் சேதம் ஏற்பட்டுள்ளது. நம்பர் 56 , behind Kamala, சிங்காநல்லூர் என உள்ளது. மேற்படி விவரம் யார் கொடுத்த தகவலின் பெயரில் பதிவு செய்யப்பட்டது என்று பதிவேட்டில் இல்லை என்றால் மருத்துவ அதிகாரியால் தகவல் வழங்கப்பட்டது. பதிவேட்டில் கௌரி என்பவர் 25.04.1975 ல் கோவை அரசு மருத்துவமனையில் பிறந்ததாக குறிப்பு எதுவும் இல்லை என்றால் சரிதான். எங்களது பதிவேட்டில் சண்முகம் (எ) வேலாயுதம் என்று குறிப்புகள் எதுவும் இல்லை என்றால் சரிதான், வேலாயுதம் என்று மட்டும் உள்ளது.

**மறுவிசாரணை இல்லை.**

Taken down by me to open court read over to the witness and acknowledged by him / her to be correct

Sd./M.Santhosham

District Munsif, Sulur